Additional Commissioner (Non-GST)
Chepauk
31 MAY 2022
Chennai-600 005
O/o the Commissioner of Commercial Taxes

**சுருக்கம்**

வணிகவரித் துறை – தமிழ்நாடு வணிகர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கும் குடும்ப நல நிதி உதவி ரூ.1.00,000/–லிருந்து ரூ.3,00,000/–ஆக உயர்த்தி வழங்குதல் –ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவுத்(டி2)துறை**

அரசாணை (நிலை) எண். 86 — நாள்: 30.05.2022
சுபகிருது, வைகாசி–16
திருவள்ளுவர் ஆண்டு 2053.

படிக்கப்பட்டன:

1. அரசாணை (2டி) எண்.96, வணிகவரி மற்றும் பதிவுத் துறை, நாள் 02.07.2007.
2. அரசாணை (நிலை) எண்.44, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 28.02.2011.
3. செய்தி வெளியீடு எண்.722, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, நாள் 05.05.2022.
4. கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையரின் கடித எண்.வநவா/68/2022, நாள் 6.5.2022.

-----

**ஆணை:–**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி வணிகர் நல வாரிய உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு குடும்பநல உதவித் தொகை ரூ.50,000/– வழங்கப்பட்டு வந்தது. அதனைத் தொடர்ந்து, இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி தற்போது வணிகர் நல வாரிய உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு குடும்ப நல உதவித் தொகை ரூ.1,00,000/– வழங்கப்பட்டு வருகிறது.

2. திருச்சியில் 05.05.2022 அன்று நடைபெற்ற 39–வது தமிழக வணிகர் விடியல் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு வணிகர் நல வாரிய உறுப்பினர்கள் உயிரிழக்கும் பட்சத்தில் அவர்களது குடும்பத்திற்கு தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தால் தற்போது வழங்கப்பட்டு வரும் குடும்பநல உதவித் தொகை ரூ.1,00,000/–லிருந்து இனிவரும் காலங்களில் ரூ.3,00,000/–ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட செய்தி வெளியீட்டில் அறிவிப்பு செய்துள்ளார்கள்.

3. அதனடிப்படையில், வணிகர் நல வாரியத்தில் நிரந்தர உறுப்பினராக பதிவு பெற்றுள்ள வணிகர்களுக்குக் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு குடும்ப நல உதவித் தொகை உயர்த்தி வழங்க ஆணை வழங்குமாறு மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:–

i. வணிகர் நல வாரியத்தில் நிரந்தர உறுப்பினராகப் பதிவு பெற்று குறைந்தது ஓர் ஆண்டாவது உறுப்பினராக இருத்தல் வேண்டும்.
ii. உறுப்பினர் மதிப்பு கூட்டு வரி அல்லது சரக்குகள் மற்றும் சேவைகள் வரியில் பதிவு பெற்றிருப்பின் முறையாக மாதாந்திர நமுனா தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும்.
iii. அரசாணை (2டி) எண்.96 வணிகவரி (ம) பதிவுத் துறை, நாள் 02.07.2007–இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும்.
iv. உறுப்பினர் எவரும் வேறு எந்த நல வாரியத்திலும் பதிவு பெற்று நல உதவித் திட்டம் எதுவும் பெற்றிருத்தல் கூடாது.
v. உறுப்பினரின் மரணம் தற்கொலையாக இருத்தல் கூடாது.

4. மேற்கண்ட நிலையில், 5.5.2022 அன்று திருச்சிராப்பள்ளியில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் சார்பில் நடைபெற்ற 39–வது தமிழக வணிகர் விடியல் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, வணிகர் நல வாரியத்தில் நிரந்தர உறுப்பினர்களாக உள்ள வணிகர்கள் இறக்க நேரிட்டால் அவர்களின் குடும்பத்திற்கு மேலே பத்தி–3–இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, குடும்நல உதவித் தொகை ரூ.1,00,000/–லிருந்து ரூ.3,00,000/–ஆக உயர்த்த அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சாரா்பற்ற குறிப்பு எண்.23514/வருவாய்/2022, நாள் 27.05.2022–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.ஜோதி நிர்மலாசாமி
அரசுச் செயலாளர்.

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை –5.
கூடுதல் ஆணையர்(வணிகவரி) /முதன்மைச் செயல் அலுவலர், தமிழ்நாடு வணிகர் நல வாரியம், சென்னை –5.
மாநில கணக்காயர் (கணக்குகள் மற்றும் உரிமைகள்), சென்னை–18.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–18.
(கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் வழியாக)

<u>நகல்:–</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை –9
மாண்புமிகு அமைச்சரின் (வணிகவரி மற்றும் பதிவு) நேர்முக உதவியாளர், சென்னை –9.
அரசுச் செயலாளரின் தனிச்செயலர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை, சென்னை–9.
நிதித்(வருவாய்) துறை, சென்னை –9.
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

30/5/22
பிரிவு அலுவலர்
30/5/22